TNVR070005772024

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்
2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 29 ம் நாள் திங்கள்கிழமை

**அசல் வழக்கு எண்.51/2024**

***C.N.R.No.TNVR070005772024***

-----

முத்துமாரியம்மாள் .. வாதி

/எதிர் /

1) வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
வெம்பக்கோட்டை.

2) மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
விருதுநகர். .. பிரதிவாதிகள்

இந்த வழக்கானது இறுதியாக என் முன்பாக 25.06.2026 அன்று விசாரணைக்காக வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. C. முத்துக்கண்ணு, அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இருதரப்பு வாதுரை, சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

இந்த வழக்கானது வாதியின் பாட்டி மாரியம்மாள் கடந்த 07.07.1979 ல் இறந்தார் என்று விளம்புகை செய்ய உத்தரவிட வேண்டியும், வாதியின் தாத்தா சுப்பன் செட்டியார் கடந்த 27.04.1982 ல் இறந்தார் என்று விளம்புகை செய்ய உத்தரவிட வேண்டியும், வழக்கு செலவுத் தொகை வேண்டியும், இதர பரிகாரங்கள் வேண்டியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>**வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் –**</u>

**2.1.** சுப்பன் செட்டியார், மாரியம்மாள் தம்பதிகளின் காலம் சென்ற முத்தையா செட்டியார் மட்டுமே ஒரே வாரிசு ஆவார். மேற்படி முத்தையா செட்டியாருக்கு இந்த வாதி மட்டுமே ஒரே வாரிசு ஆவார். வாதியின் தகப்பனார் கடந்த 01.08.2003 ம் தேதி காலமாகிவிட்டபடியால் அன்னாருக்கு இறப்பு சான்றிதழும், வாரிசு சான்றிதழும் தாக்கல் செய்திருக்கின்றார். மேற்படி வாதியின் தகப்பனார் காலம் சென்ற முத்தையா செட்டியார் தனது தாயார் மாரியம்மாள் கடந்த 07.07.1979 லும், தகப்பனார் சுப்பன் செட்டியார் கடந்த 27.04.1982 லும் காலமாகிவிட்டபடியால் மேற்படி தாய் தந்தையருக்கு இறப்பு சான்றிதழ்கள் பெறாமல் காலமாகிவிட்டார். தற்போது மேற்படியார்களின் ஒரே வாரிசான வாதி மட்டுமே இருந்து வருகின்றார்.

2.2. மேற்படி வாதியின் தாத்தா சுப்பன் செட்டியார், பாட்டி மாரியம்மாள் பெயரிலுள்ள சொத்துக்களை இந்த வாதி மட்டுமே அனுபவித்து வரும் நிலையில் வாதியின் பெயருக்கு பட்டா முதலியவை மாற்ற தன் தாத்தா சுப்பன் செட்டியார், பாட்டி மாரியம்மாளுக்கு இறப்பு சான்றிதழ் தேவைப்படுகிறது. இறப்புச் சான்று கோரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், சாத்தூரில் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த இரு மனுக்களும் வெம்பக்கோட்டை வட்டாட்சியருக்கு விசாணைக்கு அனுப்பப்பட்டதில் முடிவில் மனுவின் விசாரணையில் வாதியின் பாட்டி மாரியம்மாள் 1950 ம், தாத்தா சுப்பன் செட்டியாரும் 1950 க்கு முன் இறந்துள்ளார்கள் என்றும், தவறான காரணங்களை கூறி இறப்பு சான்றிதழில் வழங்க மேற்கண்ட மனு மீது நடவடிக்கை எடுக்க மார்க்கமில்லை என்று வெம்பக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து வாதியின் மனுவானது கடந்த 23.03.2024 தேதியில் வட்டாட்சியரால் தள்ளுபடி செய்யப்பட்டு வாதிக்கு குறிப்பாணை அனுப்பப் பட்டுள்ளது. வாதியின் தாத்தா, பாட்டி இறந்தது சம்பந்தமாக சாத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் இறப்புச் சான்று கோரி மனு செய்ததில் சாத்தூர் சார்பதிவாளர் மேற்படி நபர்களில் இறப்பு பதிவு செய்யப்படவில்லை என்று சான்று வழங்கியுள்ளார்.

வாதி இறப்பு சான்றிதழ் கோரி தாக்கல் செய்த மனுவை சரியான வகையில் விசாரணை செய்யாமல் வட்டாட்சியர் அவர்கள் தள்ளுபடி செய்துள்ளார். எனவே வழக்கு தாக்கல்.

3. **<u>1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2ம் பிரதிவாதியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்–</u>**

**3.1.** வாதி கூறியுள்ள சங்கதிகள் யாவற்றையும் இந்நிர் பிரதிவாதியால் முற்றிலும் மறுக்கப்படுகிறது. வாதி வழக்கில் கூறியுள்ள சங்கதிகள் யாவற்றையும் வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். வாதியின் பாட்டி மாரியம்மாள் கடந்த 07.07.1979ம் தேதியிலும், தாத்தா சுப்பன் செட்டியார் 24.04.1982ம் தேதியிலும் இறந்துவிட்டனர் என்று தெரிவித்துவிட்டு வாதி தாவா வழக்கினை இறந்துவிட்டார் என்று விளம்புகை செய்ய கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படியார்களின் இறப்பினை 1ம் பிரதிவாதியின் அலுவலகத்தில் பதிவு செய்யகோரி எந்த பரிகாரமும் கோரவில்லை. வாதியின் பாட்டி, தாத்தா இறந்துவிட்டார்கள் என்று காண்பிப்பதற்கான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை.

3.2. மேற்படியார்களின் பெயரில் சொத்துக்கள் உள்ளது என்றும் அதனை வாதி அனுபவித்து வருகிறார் என்று கூறியுள்ளதை வாதி ஆவணங்கள் மூலமாக நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மேலும் வாதி வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்துள்ளதாக கூறியுள்ளர்ர். ஆனால் அதற்கான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை. மேலும் தாவா பிராதில் வாதி இறப்பு சான்றிதழ் கோரி வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் சாத்தூரில் மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், அந்த இரு மனுக்களும் வெம்பக்கோட்டை வட்டாட்சியருக்கு விசாரணைக்கு அனுப்பப்பட்டது என்று கூறியுள்ள நிலையில் இரு மனுக்கள் என்னென்ன என்ற விபரத்தினை பிராதில் சொல்லக் கிடையாது. வாதியின் தாத்தா பாட்டி இறப்பு சான்று கோரியதில் மேற்படியார்களின் இறப்பு பதிவு செய்யப்படவில்லை என்று சான்று வழங்கியுள்ளர். மேற்படி சான்றினை பெற்ற வாதி பிறப்பு இறப்பு பதிவு சட்டத்தின் கீழ் இறப்பை பதிவு

செய்ய வேண்டி சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் மனு கொடுத்து உரிய நிவாரணம் தேடிக்கொள்ளாமல் வழக்கு தாக்கல் செய்ய வாதிக்கு எந்த முகாந்திரமும் இலலை. மேற்படியார்களின் இறப்பை 1ம் பிரதிவாதியின் இறப்பு பதிவேட்டில் பதிவு மேற்கொள்ள உறுத்துக் கட்டளை பரிகாரம் கோராமல் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை. எனவே வாதியின் வழக்கானது இந்த பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

**4. <u>எழுவினாக்கள்</u>**

1) வாதி தனது பாட்டி மாரியம்மாள் கடந்த 07.07.1979 ல் இறந்துவிட்டார் என்று வேண்டியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?

2) வாதி தனது தாத்தா சுப்பன் செட்டியார் கடந்த 27.04.1982–ல் இறந்துவிட்டார் என்று வேண்டியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?

3) வாதியின் தாத்தா மற்றும் பாட்டியின் இறப்பை 1ம் பிரதிவாதியின் இறப்பு பதிவேட்டில் பதிவு மேற்கொள்ள உறுத்துக் கட்டளை பரிகாரம் கோராமல் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளது ஏற்றுக்கொள்ளத்தக்கதா?

4) வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

5. **<u>சாட்சிகள்-</u>**

வாதி தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் எந்தவித வாய்மொழி சாட்சியமும் இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளதால் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியமானது முடிக்கப்பட்டது.

6. **<u>1 முதல் 3 எழுவினாவிக்களின் பேரிலான தீர்வு–</u>**

வனையப்பட்ட எழுவினாக்கள் அனைத்தும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவை என்பதால், அவை அனைத்தும் ஒன்றாக பரிசீலிக்கப்படுகின்றன.

6.1. வாதி, தனது பாட்டி மாரியம்மாள் 07.07.1979 அன்றும், தாத்தா சுப்பன் செட்டியார் 27.04.1982 அன்றும் இறந்ததாக இந்நீதிமன்றம் விளம்புகை வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார். இவ்வகையான விளம்புகைப் பரிகாரத்தை கோரும் நபர், தாம் கூறும் சங்கதிகளை உறுதியான மற்றும் நம்பகமான சாட்சியங்கள் மூலம் நிரூபிக்க வேண்டிய கடமை உடையவர்.

6.2. பாரதிய சாக்ஷ்ய ஆதினியம் (BSA) 2023–ன் பிரிவுகள் 104, 105 மற்றும் 106–ன் படி, ஒரு சங்கதியை நீதிமன்றம் உண்மை என ஏற்றுக்கொள்ள வேண்டுமென கோரும் தரப்பினர், அந்தச் சங்கதியை நிரூபிக்கும் ஆரம்பச் சுமையை ஏற்க வேண்டும். எனவே, இவ்வழக்கில் 07.07.1979 மற்றும் 27.04.1982 ஆகிய குறிப்பிட்ட தேதிகளில் மாரியம்மாள் மற்றும் சுப்பன் செட்டியார் இறந்தனர் என்பதை முதற்கட்டமாக வாதியே நிரூபிக்க வேண்டியிருந்தது.

6.3. வாதி தனது சாட்சியத்திலும், வாதியின் கணவர் வா.சா.2–ன் சாட்சியத்திலும் மேற்படி தேதிகளை குறிப்பிட்டிருந்தாலும், அவற்றை உறுதிப்படுத்தும் சமகாலத்து சுயாதீன ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. அக்காலத்தில் பெறப்பட்ட மருத்துவப் பதிவுகள், ஊராட்சி பதிவுகள், வருவாய் பதிவுகள் அல்லது அக்காலத்தைச் சேர்ந்த வேறு எந்த நடுநிலையான ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை.

6.4. வாதி தனது தாத்தா, பாட்டிக்குத் தாம் ஒரே வாரிசு என்று வாதிட்டுள்ளார். அதனை உறுதிப்படுத்த இடைப்பட்ட தலைமுறையைச் சேர்ந்த தனது தந்தை முத்தையா செட்டியார் மற்றும் தாயார் ஆகியோரின் இறப்பு மற்றும் வாரிசு தொடர்பான ஆவணங்கள் மிக முக்கியமானவை. ஆனால், வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில், அவ்வாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், அவற்றை தாக்கல் செய்தால்தான் தனது மனைவியே ஒரே வாரிசு என்பது தெரியவரும் என்றும் ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். இந்த வாக்குமூலம், அவருக்கு வழக்கின் உண்மை நிலை மற்றும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் குறித்த

தெளிவின்மையை வெளிப்படுத்துகிறது.

6.5. மேலும், வா.சா.2 தனது குறுக்கு விசாரணையின் தொடக்கத்திலேயே, வாதி தனது தாத்தா, பாட்டிக்கு வாரிசுச் சான்றிதழ் கோரி வழக்கு தொடர்ந்துள்ளார் என்று கூறியுள்ளார். உண்மையில், இவ்வழக்கு வாரிசுச் சான்றிதழ் கோரும் வழக்கல்ல; குறிப்பிட்ட இறப்புத் தேதிகளை விளம்புகை செய்யக் கோரும் வழக்காகும். வழக்கின் தன்மையே சாட்சிக்குத் தெரியாதிருப்பது, அந்த சாட்சியின் நம்பகத்தன்மையை குறைக்கிறது.

6.6. மறுபுறம், 1–ம் பிரதிவாதியான வட்டாட்சியர், வாதியின் மனுவின் மீது கள விசாரணை நடத்தி, சுப்பன் செட்டியார் 1950–க்கு முன்பாகவும், மாரியம்மாள் சுமார் 1950–ஆம் ஆண்டளவில் இறந்திருக்கலாம் என்று அறிக்கை பெற்று, அதன் அடிப்படையில் மனுவை நிராகரித்துள்ளார். அந்த நிராகரிப்பு குறிப்பாணைகள் வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6.7. அரசு அலுவலர் தனது அலுவல் கடமையைச் சட்டப்படி செய்துள்ளார் என்பதற்கான அனுமானம் பாரதிய சாக்ஷ்ய ஆதினியம் (BSA) 2023–ன் பிரிவு 115–ன் Illustration (e)– in BNS–ன் கீழ் நீதிமன்றத்தால் மேற்கொள்ளப்படுகிறது. இந்த அனுமானத்தை சீர்குலைக்கும் பொறுப்பு, அதனை எதிர்க்கும் வாதியின் மீது உள்ளது.

6.8. இவ்வழக்கில், வட்டாட்சியரின் கள ஆய்வு தவறானது என்பதை நிரூபிக்கும் எந்தவித சுயாதீன ஆதாரமும் வாதி தாக்கல் செய்யவில்லை. வாதியின் வாய்மொழிச் சாட்சி மற்றும் அவரது கணவரின் சாட்சியைத் தவிர, குறிப்பிட்ட இறப்புத் தேதிகளை உறுதிப்படுத்தும் எந்த நம்பகமான ஆதாரமும் இல்லை.

6.9. உரிமையியல் வழக்குகளில் "நிகழ்தகவுகளின் மேம்பாடு" என்ற கொள்கை பொருந்தினாலும், அதுவே வெறும் வாய்மொழிச் சாட்சியின் அடிப்படையில் குறிப்பிட்ட நாள், மாதம், ஆண்டு ஆகியவற்றை நீதிமன்றம் விளம்புகை செய்யலாம் என்பதல்ல. குறிப்பாக, சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்பு

நிகழ்ந்ததாகக் கூறப்படும் இறப்பின் துல்லியமான தேதியை நீதிமன்றம் அறிவிக்க வேண்டுமெனில், அதற்கு வலுவான ஆதாரங்கள் அவசியம்.

6.10. இவ்வழக்கில் அவ்வகையான ஆதாரங்கள் இல்லாததோடு, வாதி தரப்பு சாட்சியங்களிலேயே கணிசமான முரண்பாடுகள் காணப்படுகின்றன. ஆகவே, 07.07.1979 மற்றும் 27.04.1982 ஆகிய துல்லியமான தேதிகளில் மாரியம்மாள் மற்றும் சுப்பன் செட்டியார் இறந்தனர் என்ற வாதி தரப்பு கூற்று நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

6.11. மேலும், வாதி வெறும் விளம்புகைப் பரிகாரம் மட்டுமே கோரியுள்ளார். குறிப்பிட்ட இறப்பினை பதிவு செய்யுமாறு உரிய அதிகாரிக்கு எதிராக கட்டாய செயலுறுத்துக் கட்டளை எதுவும் கோரப்படவில்லை. குறிப்பிட்ட தேதிகளை விளம்புகை செய்வது மட்டும், வாதி விரும்பும் நடைமுறை நிவாரணத்தை தானாகவே ஏற்படுத்தாது.

6.12. குறிப்பாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு தொடர்பான சிறப்பு சட்டமான Registration of Births and Deaths Act, 1969–இல், காலதாமதமாக பதிவு செய்யப்படாத இறப்புகளை பதிவு செய்வதற்கென தனிப்பட்ட நடைமுறை வகுக்கப்பட்டுள்ளது. ஒரு சிறப்புச் சட்டம் குறிப்பிட்ட நடைமுறையை வழங்கியிருக்கும் போது, அந்த நடைமுறையைப் பின்பற்றாமல் வெறும் விளம்புகை வழக்கின் மூலம் அதே நிவாரணத்தைப் பெற முயற்சிப்பது உரிய சட்ட அணுகுமுறையாகக் கருதப்பட முடியாது. எனவே, வாதி கோரியுள்ள விளம்புகைப் பரிகாரத்தை வழங்குவதற்கு சட்டரீதியான மற்றும் சான்றாதார ரீதியான போதுமான அடிப்படை இல்லை. இதனால், 1 முதல் 3 எழுவினாக்கள் வாதிக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது. இதன் விளைவாக, வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

6.13. இருப்பினும், இத்தீர்ப்பு, வாதி Registration of Births and Deaths Act, 1969–ன் பொருந்தக்கூடிய விதிகளின் கீழ், உரிய அதிகாரியை அணுகி தாமதப் பதிவு அல்லது சட்டப்படி கிடைக்கக்கூடிய பிற நிவாரணங்களை கோருவதற்கு எவ்வித

தடையாகவும் அமையாது. வழக்கின் தன்மையைக் கருத்தில் கொண்டு, செலவுத் தொகை குறித்து எவ்வித உத்தரவும் இல்லை.

7. **<u>4ம் எழுவினாவின் பேரிலான தீர்வு–</u>**

எழுவினாக்கள் 1 முதல் 3 வாதிக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ள நிலையில் வேறு எந்த பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என 4ம் எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

8. **<u>இறுதி முடிவு</u>**

இறுதியாக, வாதியின் வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை குறித்து எவ்வித உத்தரவும் இல்லை.

இந்த தீர்ப்புரை, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 29ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்–</u>**

**<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>**

வா.சா.1 – முத்துமாரியம்மாள்

வா.சா.2 – ராமர்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்–</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | --- | வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிட்ட நகல். |
| வா.சா.ஆ.2 | --- | கொடி வழி ஜாபிதா அசல் |
| வா.சா.ஆ.3 | --- | சாத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் மாரியம்மாளின் இறப்பு பதிவு விபரம் இல்லை என்று வழங்கிய சான்று அசல் |
| வா.சா.ஆ.4 | --- | சாத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் சுப்பன் செட்டியாரின் இறப்பு பதிவு விபரம் இ்லை என்று வழங்கிய சான்று அசல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.5 | 23.03.2024 | வெம்பக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் மாரியம்மாளுக்கு இறப்புச்சான்று வழங்க முடியாது என்று கூறி மனு தள்ளுபடி செய்ததற்கு வாதிக்கு அனுப்பிய வழங்கிய குறிப்பாணை அசல் |
| வா.சா.ஆ.6 | 30.03.2024 | வெம்பக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் சுப்பன் செட்டியாருக்கு இறப்புச்சான்று வழங்க முடியாது என்று கூறி மனு தள்ளுபடி செய்ததற்கு வாதிக்கு அனுப்பிய வழங்கிய குறிப்பாணை அசல் |
| வா.சா.ஆ.7 | 04.07.2024 | முத்தையா செட்டியாரின் இறப்பு சான்று அசலுடன் ஒப்பிட்ட நகல். |
| வா.சா.ஆ.8 | 12.01.2018 | முத்தையா செட்டியாரின் வாரிசு சான்று அசலுடன் ஒப்பிட்ட நகல். |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** – இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
அ.வ.எண்.51/2024
நேரிய/வரைவு
தீர்ப்புரை
நாள் – 29.06.2026.